# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 111/2024** |
| Deposition of Witness for | : PW 10 |
| Name | : டாக்டர்.கார்த்திகேயன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 12.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 12th February 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 28.09.2014 அன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது மாலை 5 மணிக்கு முருகன் என்பவரை அவரது நண்பர் சிகிச்சைக்கு அழைத்துவந்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன,

1. அவரது இடது காலில் முழங்காலுக்கு மேல் 5.5x2 செமீ அளவில் சிதைந்தகாயம் காணப்பட்டது.

2.அவரது இடது முழங்காலில் சிராய்ப்பு காணப்பட்டது.

3.அவரது வலது காலில் முட்டிக்கு கீழ் சிராய்ப்பு காணப்பட்டது.

4. அவரது இடது கை முட்டியில்சிராய்பபு காயம் காணப்பட்டது.

அவர் என்னிடம் 28.09.2014 அன்று மதியம் 4 மணிக்கு அவர் திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில் வரும்போது குருக்கப்பட்டி அருகே வந்தபோது வளைவு பாலத்தில் எதிரே வந்த கார் ஆட்டோவின் மீது மோதியதால் அவருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். மேற்படி காயங்கள் சாதாரண காயம் என என்னால் சான்று அளிக்கப்பட்டன. **முருகனின் காயச்சான்று அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதேதேதியில் மாலை 5.10 மணியளவில் பெரியதுரை என்பவரை அவருடைய நண்பர் என்னிடம் சிகிச்சைக்கு அழைத்துவந்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன,

1. அவரது இடது கையில் முட்டிக்கு கீழ் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவர் என்னிடம் 28.09.2014 அன்று மதியம் 4 மணிக்கு அவர் திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில் வரும்போது குருக்கப்பட்டி அருகே வந்தபோது வளைவு பாலத்தில் எதிரே வந்த கார் ஆட்டோவின் மீது மோதியதால் அவருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். மேற்படி காயம் சாதாரண காயம் என என்னால் சான்று அளிக்கப்பட்டது. **பெரியதுரையின் காயச்சான்று அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதேதேதியில் மாலை 5.15 மணியளவில் அப்துல்காதர் என்பவரை அவருடைய சகோதரர் சையது இப்ராகிம் என்னிடம் சிகிச்சைக்கு அழைத்துவந்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன,

1. அவரது இடது காதுக்கு பின் கழுத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
2. அவரது இடது கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவர் என்னிடம் 28.09.2014 அன்று மதியம் 4 மணிக்கு அவர் திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில் வரும்போது குருக்கப்பட்டி அருகே வந்தபோது வளைவு பாலத்தில் எதிரே வந்த கார் ஆட்டோவின் மீது மோதியதால் அவருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். மேற்படி காயம் சாதாரண காயம் என என்னால் சான்று அளிக்கப்பட்டது. **அப்துல்காதர் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசார்ணை

செய்தார். காயம்பட்ட நபர்கள் என்னிடம்கூறியவிதத்தில் அவர்களுக்கு மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்தார்.**